# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

***************

**<u>ஊடக அறிக்கை</u>**

## <u>வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இந்திய உயர் ஸ்தானிகர் விஜயம் – இரண்டாம் நாள்</u>

உயர் ஸ்தானிகரின் வட மாகாணத்துக்கான விஜயத்தின் இரண்டாம் நாளில் தொடர்புகள், கலாசாரம், நாகரீகம், சமகால விவகாரங்கள் மற்றும் வர்த்தகரீதியான விடயங்கள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

2. காங்கேசன்துறை துறைமுகத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த உயர் ஸ்தானிகர் இந்திய நிதி உதவியின்கீழ் 45.27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புனரமைக்கப்படும் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டார். இந்த பணிகள் நிறைவடைந்ததும் இத்திட்டத்தின் மூலமாக காங்கேசன்துறை மற்றும் இந்தியா இடையிலான பொருட்கள் மற்றும் படகு சேவையினை ஆரம்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

3. உயர் ஸ்தானிகர் பலாலி விமான நிலையத்திற்கும் விஜயம் மேற்கொண்டிருந்தார். சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமான சேவைகளையும் ஏனைய உள்ளூர் சேவைகளையும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகியுள்ள நிலையில், பலாலி விமான நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த சர்வதேச விமான சேவைகள் கொவிட்-19 நோய் காரணமாக கடந்த வருடம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள சூழலில் சர்வதேச விமான சேவைகளுக்காக அங்கு காணப்படும் வசதி வாய்ப்புக்களை அவர் பார்வையிட்டார். இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான ஏற்றுமதி அத்துடன் இந்தியா ஊடாக ஏனைய இடங்களுக்கு ஏற்றுமதி செய்தல் போன்ற வர்த்தக மேம்பாட்டு செயற்பாடுகள் உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஏற்கனவே காணப்படுவதும் வளர்ந்து வருவதுமான இந்திய வான் தொடர்பினை கருத்தில்கொண்டு விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை மேம்படுத்தல் தொடர்பாகவும் அவர் விவாதித்திருந்தார்.

4. வர்த்தக பிரமுகர்களுடன் உயர் ஸ்தானிகர் மேற்கொண்டிருந்த காலை உணவு சந்திப்பின்போதும் பல்வேறு நடைமுறைச் சாத்தியமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தது. உற்பத்தித்துறை மற்றும் சக்தித்துறை, ஆளுமை அபிவிருத்தி, விவசாயம் மற்றும் உணவு பதனிடல், மீன்பிடி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய துறைகள் சார்ந்த இந்திய முதலீட்டினை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு

கவனஞ்செலுத்தப்படிருந்தது. இவ்வாறான பரஸ்பர நலன்களை அடிப்படையாகக்கொண்ட சகல முயற்சிகளுக்கும் ஆதரவினை வழங்குவதற்கான இந்தியாவின் தயார் நிலையை உயர் ஸ்தானிகர் இங்கு வலியுறுத்தி கூறியிருந்தார். பலாலி விமான நிலையத்தின் விஸ்தரிப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி ஊடாக கடல் மற்றும் வான் தொடர்புகளை மேம்படுத்துவதன் மூலம் பிராந்தியத்திற்கு சிறந்த பொருளாதார நலன்களையும் அதேபோல செழுமையையும் ஏற்படுத்த முடியும் எனவும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

5. யாழ் மேயர் திரு வி மணிவண்ணன் அவர்களை சந்தித்த உயர் ஸ்தானிகர் இந்திய நன்கொடையில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையத்திற்கும் அவருடன் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். இந்தியாவுடனான மிகவும் நெருக்கமான கலாசார மற்றும் கட்டிடக்கலை சார்ந்த தொடர்புகளை எடுத்தியம்பும் இந்த கலாசார நிலையமானது நாகரீகம், மரபுரிமைகள் மற்றும் கடல் கடந்த உறவுகளை வலியுறுத்தும் கலாசாரம் சார்ந்த செயற்பாடுகளுக்காக மக்களை மையப்படுத்திய சேவையினை வழங்குவதனை இலக்காககொண்டுள்ளது. விரைவில் இந்த கலாசார நிலையத்தை திறந்து வைத்து கூட்டு முகாமைத்துவத்தின் அடிப்படையில் அதன் செயற்பாடுகளை முன்னெடுப்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் உயர் ஸ்தானிகர் இங்கு கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.

6. யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் கல்வியின் தெய்வமான சரஸ்வதி சிலைக்கும், திருவள்ளுவர் சிலைக்கும் உயர் ஸ்தானிகர் மரியாதை செலுத்தினார். இந்தியாவுடனான மொழி, இலக்கிய மற்றும் கல்வி ரீதியான தொடர்புகளை கொண்டாடும் யாழ் பொது நூலகத்தில் அமைந்திருக்கும் இந்திய மையத்திற்கும் அவர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பின்தங்கிய சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்த தியாகியும் இந்திய அரசியலமைப்பின் தந்தை எனவும் கூறப்படும் பாபாசாகிப் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் செயற்பாடுகள் மற்றும் வாழ்க்கையினை நினைவு கூறும் வகையில் இந்திய மையத்தின் நிகனைவேந்தலை உயர் ஸ்தானிகர் பாராட்டினார். அத்துடன் மறைந்த ஜனாதிபதி டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்களுக்கும் உயர் ஸ்தானிகர் மலரஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

7. யாழ்ப்பாணத்தின் இராமநாதன் கல்லூரியில் பாடசாலை கட்டடங்களை திறந்து வைப்பதற்கான நிகழ்வொன்றில் இலங்கையின் மனித வலு அபிவிருத்திக்கான இந்திய உறவு மற்றும் ஒத்துழைப்பு வெளிப்படுத்த பட்டிருந்தது. சமூக, பொருளாதாரம் மற்றும் அரசியல், நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கும் திறன்மிகு அபிவிருத்திக்கும், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளின் தரமான கல்விக்கான முக்கிய தேவை குறித்து உயர்ஸ்தானிகர் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

8. யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய கொன்சூல் ஜெனரலால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முன்னணி ஊடகவியலாளர்கள் உடனான மதியநேர சந்திப்பொன்றின்போது கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக வெளிப்பாடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்தியம்பப்பட்டிருந்தது. கொன்சுலேட் அலுவலகத்துடன் கிரமமான உறவொன்றினை ஊடகங்கள் பேணும் வகையிலான தளம் ஒன்றினை அமைப்பதற்கான பரிந்துரை வரவேற்கப்பட்டிருந்தது.

9. நாளின் ஆரம்பத்தில் இலங்கையின் மிகவும் பிரசித்தமான வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் உயர் ஸ்தானிகர் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார். அத்துடன் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் ஏனைய இந்துமத ஆன்மீக தலைவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்த உயர் ஸ்தானிகர் இந்தியா - இலங்கை நாடுகளினதும், இருநாடுகளினது மக்களினதும் பாரம்பரிய ரீதியிலான உறவுகளை மேலும் வலுவாக்க ஆசியினை வேண்டியிருந்தார்.

10. இலங்கையின் சமாதானத்துக்காக தமது வாழ்வினை தியாகம் செய்த இந்திய இராணுவ வீரர்களுக்கு இந்திய அமைதி காக்கும் படையினரின் தூபியில் உயர் ஸ்தானிகர், பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா மற்றும் இலங்கை இராணுவத்தின் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தி நினைவு கூர்ந்தனர். யாழ்ப்பாணம் பாதுகாப்புப்படை தலைமையகத்தில் இடம்பெற்றிருந்த சிறிய சந்திப்பொன்றில் உயர் ஸ்தானிகரும் விசேட படைகளின் தளபதியும் பகிரப்பட்ட எமது பிராந்தியத்தின் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக செவையாற்றும் நட்புமிகு இரு நாட்டு படைகளிடையிலுமான வளர்ந்துவரும் ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

11. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் குடும்பத்தினருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த உயர் ஸ்தானிகர் சகல துறைகளிலும் இந்திய-இலங்கை உறவினை மேம்படுத்துவதற்காக கடினமாக உழைக்கும் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்தார்.

**************

கொழும்பு
13 மார்ச் 2021